# ஜனவரி 4, 2021 தேதி முதல் ப்ராம்ப்ட்டன் பேருந்து சேவைகளில் மாற்றங்கள்

ப்ராம்ப்ட்டன் , ON (டிசம்பர் 16, 2020) – பின் வரும் ப்ராம்ப்ட்டன் நகர பேருந்து போக்குவரத்து வழித்தடங்களில், ஜனவரி 4, 2021 தேதி முதல் அடுத்த அறிவிப்பு வரும் வரை பேருந்துகள் இயங்கும்; இது நகரை சுற்றிலுமாக நமது போக்குவரத்து வசதியைக் கொண்டு, மக்கள் இலகுவாக இடம் பெயர்வதை உறுதி செய்யும்.

- 501 ஸூம் க்வீன்
- 502 ஸூம் மெயின்*
- 505 ஸூம் பொவெய்ர்ட்
- 511/511A/511C* ஸூம் ஸ்டீல்ஸ்*
- 1  க்வீன்*
- 2 மெயின்*
- 3/ 3A மெக்லாலின்
- 4/4A சிங்வாகவ்ஸி*
- 5/5A பொவெய்ர்ட்
- 6 ஜேம்ஸ் போட்டெர்
- 7/7A கென்னடி
- 8 சென்டர்*
- 9 வோட்டென்*
- 10 சவுத் கேட்
- 11/11A ஸ்டீல்ஸ்*
- 12 க்ரெனோபில்*
- 13 அவொண்டேல்*
- 14/14A டார்ப்ரோம்*
- 15/ 15A* ப்ரமீலியா
- சவுத்கேட்*
- 17 ஹவ்டென்*
- 18 டிக்ஸீ*
- 19 ஃபெர்ன்ஃபாரஸ்ட்*
- 20 ஈஸ்ட் இண்டஸ்ட்ரியல்
- 23 சாண்டல்வுட்

- 24 வான் கிர்க்
- 25 ஈடென்ப்ரூக்
- 26 மவுண்ட் ப்ளெசண்ட்
- 27 ராபர்ட் பார்கின்ஸன்
- 28 வான்லெஸ்
- 29/29A வில்லியம்ஸ் பார்க்வே
- 30 ஏர்போர்ட் ரோட்*
- 31 மெக்வீன்
- 32 ஃபாதர் டோபின்
- 33 பீட்டர் ராபர்ட்ஸன்
- 35 க்லார்க்வே
- 50 கோர் ரோட் *
- 51 ஹியர்ஃபோர்ட்*
- 52 மெக்மர்ச்சி*
- 53 ரே லாஸன்
- 54 கவுண்ட்டி கோர்ட்
- 55 எல்பர்ன் மார்க்கெல்*
- 56 கிங் ங்னோல்
- 57 சாரோலெய்ஸ்
- 60 மிச்சிஸ்சாகா ரோட்
- 81 மேஃபீல்ட் வெஸ்ட்
- 115 ஏர்போர்ட் எக்ஸ்பிரஸ்

*பேருந்து சேவைத் தடங்களுக்கான புது தகவல்கள். பிரயாணம் செய்யும் முன்பாக வழித்தட அட்டவணைகளுடன் சரிபார்த்துக்கொள்ளவும்.

ப்ரமீலியா, ப்ராம்ப்ட்டன் கேட்வே மற்றும் டவுண்டவுன் பேருந்து முனைய கட்டிடங்களில் காலை 6 முதல் இரவு 9 மணி வரை சேவைகள் பெறலாம். ட்ரினிட்டி காமன் பேருந்து முனையம் மூடப்பட்டே இருக்கும். பேருந்து முனையங்களின் வாடிக்கையாளர் சேவை நேரங்களை அறிய வருகை தரவும்: www.bramptontransit.com.

நமது சமுதாயத்தை பாதுகாப்புடன் வைத்திருக்க நமது பங்கினை நாம் ஆற்றவேண்டும். நினைவில் வைத்திருக்கவும்:

- பேருந்து முனையங்கள் மற்றும் பேருந்துகளின் உள்ளே இருக்கும்போது முகத்திரைகள் அல்லது மருத்துவம் அல்லாத முக்கவசங்கள் அணிவது கட்டாயமாகும் - மருத்துவ நிலைமைகள் உள்ளிட்ட விலக்குகள் சிலருக்கு பொருந்தும். உங்கள் மூக்கு, வாய் மற்றும் தாடைப்பகுதியை எல்லா நேரங்களிலும் முகக் கவசம் மறைத்திருக்க வேண்டும்.
- முக கவசம் அணிந்திருந்தாலும் கூட, பேருந்துமுனையங்களிலும் பஸ் நிறுத்தங்களிலும் உடல் ரீதியான சமூக விலகலை பராமரிக்கவும்.
- பயணத்தின் போது கை சுத்திகரிப்பி அல்லது துடைப்பான்கள் போன்ற உங்கள் சொந்த கிருமிநாசினியை எடுத்துச் செல்லவும் மற்றும் உங்கள் கைகளை அடிக்கடி கழுவவும்.
- நீங்கள் உடல்நலம் இல்லாது இருந்தால், பேருந்தில் பயணிப்பதைக் கைவிட்டு, அருகாமையில் இருக்கின்ற கோவிட்-19 மதிப்பீட்டு மையத்தில் சோதனைசெய்துகொண்டு, பொதுச் சுகாதார அறிவுறுத்தல்களைப் பின்பற்றவும்.

**கோவிட்-19 (COVID-19) பாதுகாப்பு நடவடிக்கைகள்**

மேம்படுத்தப்பட்ட கால அட்டவணைப்படி பேருந்துகளைத் தூய்மைப்படுத்தி அவற்றில் கிருமிநாசினி தெளிக்கும் வேலை மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு 48 மணிக்கொரு முறை பேருந்துகளின் அனைத்து மேற்பரப்புகள், இயக்குபவர் அமருமிடம் மற்றும் அனைத்து இருக்கைகளையும் கிருமிநாசினி தெளித்து சுகாதாரமாக வைப்பதே ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து சேவையின் இலக்காகும். தற்சமயம் பெரும்பாலான பேருந்துகளில் 24 மணி நேரத்திற்கு ஒருமுறை கிருமிநாசினி தெளிக்கப்படுகின்றது. பேருந்து முனையங்கள் மற்றும் நிறுத்தங்களில் உள்ள மேற்பரப்புகளும்கூட தினசரி அடிப்படையில் தூய்மைப்படுத்தி கிருமிநாசினி தெளித்து சுகாதாரமாக வைக்கப்படும்.

பீல் ப்ப்ளிக் ஹெல்த் அமைப்பின் வழிகாட்டுதலின் பேரில், பேருந்துகளிலும் பேருந்து முனையங்களிலும் மருத்துவம் அல்லாத முகக் கவசம் அணிவது கட்டாயம் என்பது பயணிகளுக்கு நினைவூட்டப்படுகிறது. ஆபத்துக்களை தொடர்ந்து கண்காணிப்பதற்காக, ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகமானது, பீல் பப்ளிக் ஹெல்த் மற்றும் ப்ராம்ப்ட்டன் அவசரநிலை மேலாண்மை அலுவலகம் ஆகியவற்றுடன் நெருக்கமாக செயல்படுகிறது.

வழக்கமான புதுப்பிப்புகளுக்கு www.brampton.ca/covid19 ஐப் பார்வையிடவும், www.bramptontransit.com க்கு வருகை தரவும் அல்லது சேவை புதுப்பிப்புகளுக்காக ட்விட்டரில் @bramptontransitஐப் பின்பற்றவும். கேள்விகள் ஏதுமிருப்பின் ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து அமைப்பின் தொடர்பு மையத்தை 906.874.2999 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் பரிமாற்றம்
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca